**இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி) அவர்களின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர்: திரு.ச.ஆனந்த்.,**

ந.க.பஅ3/2154/2021 நாள்: 29.05.2023

பொருள்: பணியமைப்பு - இராணிப்பேட்டை மாவட்டம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு – வாலாஜா ஊராட்சி ஒன்றியம் - ஊர்நல அலுவலர் நிலை-II – திரு.வே.கோபு - 08.07.2022 அன்று பணியிடை காலமானது – வாரிசுதாரர்/மகன் திரு.கோ.ஹரிஷ்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கி ஆணையிடுதல் – சார்பு.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1)த் துறை, நாள்:23.01.2020.
2. திருமதி.கோ.உமாராணி, க/பெ.லேட்.கோபு எண்17/7/3, வாணியர் தெரு, திமிரி என்வரது விண்ணப்பம் நாள்:05.01.2023
3. திமிரி பேரூராட்சி பதிவாளரின்(பிறப்பு மற்றும் இறப்பு) சான்றிதழ் எண். D-2022:33-18296-000073 நாள்:21.07.2022
4. ஆற்காடு வட்டாட்சியரின் இணையதள வாரிசு சான்றிதழ் எண். TN-7202207211839 நாள்:27.07.2022
5. ஆற்காடு வட்டாட்சியரின் ஒருங்கிணைந்த சான்றிதழ் எண்.நி.மு.பி2/212/2023 நாள்:27.01.2023
6. வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), ஊராட்சி ஒன்றியம், வாலாஜா என்பவரின் கடிதம் ந.க.அ1/081/2023 நாள்:28.02.2023
7. உதவி இயக்குநர், அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம், வேலூர் அவர்களின் கடிதம் ஓ.மு.எண்.1432/அ2/2023 நாள்:10.04.2023

* * * * * *

**ஆணை:**

இராணிப்பேட்டை மாவட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு, வாலாஜா ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஊர்நல அலுவலர் நிலை-IIஆகப் பணிபுரிந்து 08.07.2022 அன்று பணியிடை காலமான திரு.வே.கோபு என்பவரின் வாரிசுதாரர்/ மகன் திரு.கோ.ஹரிஷ்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில், பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு தற்காலிகமாக இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கி இதன்மூலம் ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பெயர்/முகவரி | பணியிடம்<br>வழங்கப்படும் பதவி/அலுவலகம் |
|---|---|---|
| 1. | திரு.கோ.ஹரிஷ் குமார்,<br>த/பெ.(லேட்) திரு.வே.கோபு,<br>எண்.17/7/3, வாணியர் தெரு, திமிரி<br>இராணிப்பேட்டை மாவட்டம். | இளநிலை உதவியாளர்,<br>மாவட்ட ஆட்சியரகம்,<br>ஊரக வளர்ச்சி பிரிவு,<br>இராணிப்பேட்டை.<br><br>(காலிப்பணியிடத்தில்) |

Scanned with CamScanner

//பணி நியமனத்திற்கான நிபந்தனைகள்//

- இப்பணி நியமனம் முற்றிலும் தற்காலிகமானது.
- இவர் பணியில் சேர்ந்த தேதி முதல் Pay matrix Level 8-ன்படி ரூ.19500-71900 (Old Pay PB1/Rs.5200-20200+2400GP) ஊதியம் மற்றும் இதரப்படிகள் வழங்கப்படும்.
- இவர் இவ்வுத்திரவு கிடைக்கப்பெற்றவுடன் அரசு மருத்துவ அலுவலரின் உடற்தகுதி சான்று பெற்று பணியில் சேரவேண்டியது.
- இவர் தன்னுடைய அனைத்து அசல் சான்றுகளையும் பணியில் சேரும்போது அலுவலகத் தலைவரிடம் சமர்ப்பித்திட வேண்டும்.
- இவர் அளித்துள்ள சான்றுகளில் எவைபேனும் போலியானவை எனத் தெரியவரும் பட்சத்தில் எவ்வித முன்னறிவிப்புமின்றி பணிநீக்கம் செய்யப்பட்டு காவல் துறை மூலம் குற்றவியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- இவர் இப்பணி நியமனத்தின்பேரில் எவ்வித முன்னுரிமையும் கோர இயலாது.
- பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர் பணியில் சேர்ந்த நாள் முதல் தொடர்ச்சியாக மூன்று ஆண்டு காலத்திற்குள் இரண்டாண்டு தகுதிகாண் பருவ பணிக்காலத்தை திருப்திகரமாக நிறைவு செய்ய வேண்டும்.
- இவர் தன்னுடைய தகுதிகாண் பருவக்காலத்திற்குள் (இரண்டு ஆண்டு காலத்திற்குள்) ஊரக வளர்ச்சி துறையினருக்கான அனைத்து தேர்வுகளிலும் தேர்ச்சி பெற வேண்டும் மற்றும் பவானிசாகர் அடிப்படை பயிற்சியும் தேர்ச்சி பெற வேண்டும்.
- இவர் தனது ஆளிச்சான்றுக்கான ஆவணங்களை அலுவலக தலைவரிடம் சமர்ப்பித்து பணியில் சேர வேண்டியது.
- தனியரின் வேலைவாய்ப்பு பதிவு அட்டையினை அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டியது.
- அரசாணை நிலை எண்.430, நிதி துறை நாள்:06.08.2004-ன் படி இவர் பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படுவார்.

(ஒப்பம்) 29.5.2023

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர்(வளர்ச்சி),
இராணிப்பேட்டை.

29/5/23

பெறுநர்:

திரு.கோ.ஹரிஷ் குமார்,
த/பெ.(லேட்) திரு.வே.கோபு,
எண்.17/7/3, வாணியர் தெரு,
திமிரி,
இராணிப்பேட்டை மாவட்டம்.

நகல்: வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ/கி.ஊ), வாலாஜா ஊராட்சி ஒன்றியம்.
நகல்: இணை இயக்குநர்/திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, இராணிப்பேட்டை.
நகல்: "பஅ4", "பஆ2" - இருக்கைக்கு.
நகல்: "பஅ3" இருப்புக்கோப்பிற்கு.

Scanned with CamScanner